


இந்திய நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவம், சர்வதேச அளவில் எழுப்பிய அதிர்வலைகள் சாதாரணமானவை அல்ல. அதுவும் ஒரு கட்டடம் என்று நினைத்தால், கட்டடம். ஒரு தேசத்தின் இறையாண்மைச் சின்னமாக நினைத்தால், அது.

ஒரு ரயில்வே ஸ்டேஷனில் வெடிக்கும் குண்டுக்கும் இம்மாதிரியான இடங்களில் வெடிக்கும் குண்டுகளுக்கும் அதிர்ச்சி மதிப்பு ரீதியில், நிறைய வித்தியாசங்கள் இருக்கவே செய்கின்றன. இறக்கும் உயிர்களில் அத்தகைய வித்தியாசம் ஏதும் இல்லை என்றாலும். தவிரவும் அந்தச் சந்தர்ப்பம். காலகட்டம். ஆப்கனில் அப்போது அமெரிக்கா நிகழ்த்திக்கொண்டிருந்த ருத்திர தாண்டவம் ஒன்றுதான் செய்தித் தாள்களின் முதல் பக்கத்துக்கான விஷயமாக இருந்தது. துரதிருஷ்டவசமாக அமெரிக்காவும் அதனை மட்டுமே விரும்பியது. எங்கள் யுத்தம் தீவிரவாதிகளுடன் மட்டும்தான்; ஆப்கனிஸ்தானின் அப்பாவிகளுடன் அல்ல.

'இதோ பாருங்கள், நாங்கள் அவர்களுக்கு ரொட்டிப் பொட்டலம் போடுகிறோம். வாட்டர் பாக்கெட் வீசுகிறோம். எங்கள் மனித நேயத்துக்கு ஈடு இணை கிடையாது. மேலும் யுத்தத்துக்குப் பிறகு, ஆப்கன் புனர்வாழ்வுக்காக இத்தனை லட்சம் டாலர்கள் ஒதுக்கியிருக்கிறோம். அங்கே புதிய ஜனநாயகப் பூங்கா ஒன்று உருவாகப்போகிறது. அட, தேர்தல் நடக்குமய்யா.'

செய்திகளும் செய்தி விமர்சனங்களும். அமெரிக்க ராணுவ ஹெலிகாப்டர்கள் வீசிய உணவுப் பொட்டலங்கள், மனிதர்களில்லாத வெட்டவெளியில் விழுந்து சிதறி நாய்களுக்கு உணவான காட்சிகள் புகைப்பட வடிவத்தில். இதையெல்லாம் கூடச் சமாளிக்கலாம். ஆனால், தீவிரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்று சொல்லிவிட்டு இறங்கியிருந்த அமெரிக்காவுடன் இருக்கும் உறுப்பு தேசத்தின் இயக்கம் ஒன்று, இன்னொரு தேசத்திற்குள் எல்லை தாண்டிச் சென்று நாடாளுமன்றக் கட்டட வளாகத்தில் பட்டப்பகலில் தாக்குதல் நடத்தியிருக்கிறது என்பது அமெரிக்காவின் 'தர்ம யுத்தத்துக்கு' எப்பேர்ப்பட்ட மரண அடி!

வெலவெலத்துப் போனது உலகம். ஏதாவது செய்து அந்தக் கணம் இந்திய - பாகிஸ்தான் எல்லையில் இன்னொரு யுத்தம் உருவாகிவிடாமல் தடுத்தாகவேண்டிய கட்டாயத்துக்கு அப்போது அமெரிக்கக் கூட்டணி தேசங்கள் தள்ளப்பட்டன. நியாய - அநியாயங்கள், தர்ம - அதர்மங்கள் பார்த்துக்கொண்டிருக்கக் கூட சந்தர்ப்பம் இல்லை. சட்டம் அதற்கு நேரம் கிடைக்கும்போது தன் கடமையைச் செய்துகொள்ளட்டும். இப்போதைய தேவை ஏதாவது செய்து இந்தியாவைச் சற்று ஆசுவாசப்படுத்துவது.

அதுதான், அது ஒன்றுதான் உடனடி முக்கியம். அதற்கு என்னென்ன செய்யலாம் என்று அமெரிக்க நட்பு தேசங்கள் தீவிரமாக யோசிக்கத் தொடங்கிய அதே வேளை, இந்திய காவல் துறையும் எல்லைப் பாதுகாப்புத் துறையும் ராணுவத்தின் ஒரு பகுதியும் காஷ்மீரில் உள்ள

அத்தனை அந்நிய தீவிரவாத இயக்கங்களின் ஆட்களையும் கண்டுபிடித்துக் களையெடுக்கும் பணியைப் பேய் வேகத்தில் முடுக்கிவிட்டிருந்தார்கள்.

சந்தேகத்தின் அடிப்படையில் நூற்றுக்கணக்கான ஆட்கள் தினசரி கைது செய்யப்பட்டுக்கொண்டே இருந்தார்கள். அதுநாள் வரை காஷ்மீரிகள் பார்த்திராத வகையில் அதிரடி முயற்சிகள். கண்ணில் படும் தீவிரவாதிகளின்மீது அசுரத் தாக்குதல். அவர்களது பதுங்கு தளங்கள், ரகசிய இடங்கள் அனைத்தும் குறிவைத்துக் குறிவைத்துத் தாக்கித் தகர்க்கப்பட்டன.

சம்பவம் நடந்த மறுநாளே லஷ்கர் இ தொய்பா, தான் காரணமல்ல என்று அறிக்கை விடுத்தாலும், அதனை நம்ப யாரும் தயாராக இல்லை. 13-ம் தேதி நிகழ்ந்த சம்பவத்தின் முதல் எதிர்வினையாக 15-ம் தேதி பாரமுல்லா மாவட்டத்தில் மூன்று லஷ்கர் தீவிரவாதிகளும் அடையாளம் தெரியாத இரண்டு பாகிஸ்தானியர்களும் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டனர். அடுத்த நாளே லஷ்கரின் காஷ்மீர் பிரிவு கமாண்டர் ஒருவர் ரஜௌரி பகுதியில் ஓர் என்கவுன்ட்டரில் சுட்டுத் தள்ளப்பட்டார்.

அடுத்த நாள் டிசம்பர் 20-ம் தேதி ஐந்து பேர், அதற்கு அடுத்த நாள் இரண்டு பேர், மூன்றாம் நாள் பத்துப்பேர் என்று சுட்டுத் தள்ளிக்கொண்டே இருந்தார்கள். டிசம்பர் 24-ம் தேதி பந்திப்பூரில் லஷ்கரின் மிக முக்கிய கமாண்டர்களுள் ஒருவரான சைஃபுல்லா அஸ்காரி என்பவரும் வேறு மூன்று லஷ்கர் ஆட்களும் என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டது பாகிஸ்தான் தரப்பில் புளிமூட்டையைக் கரைத்தது.

வேறு வழியில்லாமல் பாகிஸ்தான் அரசு அன்றே லஷ்கர் இ தொய்பாவின் 'ஸ்டேட் பாங்க் ஆஃப் பாகிஸ்தான்' வங்கிக் கணக்குகள் அனைத்தையும் சீல் வைத்தது. அமெரிக்காவுக்கு இந்த நடவடிக்கை போதுமானதாகத் தெரியவில்லை. இந்தியாவின் கோபத்துக்கு இது மட்டுமே மருந்தாகாது என்று நினைத்த ஜார்ஜ் புஷ், உடனடியாக லஷ்கர் இ தொய்பாவை சர்வதேச பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைத்து அறிவிப்பு வெளியிட்டார். லஷ்கர் மட்டுமல்ல; ஜெய்ஷ் ஏ முஹம்மதுவும் கூட.

இதுதான் கார்னர் பண்ணுவது என்பது. இப்போது லஷ்கர் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று அமெரிக்கா அறிவித்துவிட்டது.

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகு தழுவிய யுத்தத்தில் பாகிஸ்தான் நிற்கிறது என்றால், பாகிஸ்தான் முதலில் செய்யவேண்டியது என்ன? ஆப்கனிஸ்தானும் ஒசாமா பின்லேடனும் நாசமாய்ப் போகட்டும். உள்ளூர் அயோக்கியர்களை முதலில் ஒழித்துக்கட்டுவதுதான் உன் வேலை என்று சொல்லாமல் சொன்னார் ஜார்ஜ் புஷ். இதற்குமேல் தீவிரவாதிகளையெல்லாம் காஷ்மீர் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என்று முஷரஃப் துதிபாடி பஜனை பண்ணிக் கொண்டிருக்க முடியாது.

முஷரஃப் யோசித்தார். என்ன செய்யலாம் என்று தன் அமைச்சரவை சகாக்களுடனும் ராணுவ உயர் அதிகாரிகளுடனும் உளவுத்துறையுடனும் கலந்து விவாதித்தார். முஸஃபராபாத் பகுதியையே மூடி சீல் வைத்தாலொழிய ஒன்றும் பண்ணிவிட முடியாது. ஆனால், பாகிஸ்தானுக்குள் தன்னாட்சி அதிகாரம் பெற்ற மாகாணமாக விளங்கும் முஸஃபராபாத்தில் அப்படி ஏதாவது செய்தால், அது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தியை உண்டாக்கும். காஷ்மீரை ஒரு தேசியக் கனவாக விதைத்து ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்ட நிலையில், இப்போது இயக்கங்களை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால், உடனே அவர்கள் ஹீரோக்களாகவும் முஷரஃப் வில்லனாகவும் ஆகிவிடுவார்.

ஆனால் ஒன்று சொல்லவேண்டும். என்றைக்கு முஷரஃப் அமெரிக்கக் கூட்டணிப் படையுடன் தம்மை இணைத்துக்கொண்டாரோ, அப்போதே பாகிஸ்தானியர்கள் அவரை மனத்துக்குள்

வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், ராணுவ ஆட்சியாளராக வந்தவர், அதிபர் என்று விசிட்டிங் கார்டு வைத்திருந்தாலும் ஒரு கார்ப்பரேட் நிறுவனத்தின் தலைமை அதிகாரி போலத்தான் நடந்து கொள்கிறார் என்கிறபடியால், பல்லைக் கடித்துக்கொண்டு சகித்துக்கொண்டிருந்தார்கள். அமைச்சரவை அல்ல; ராணுவத்தின் அதிகாரமே மேலோங்கியிருந்த நிலையில், அவர்களால் வேறெதுவும் செய்ய முடியாமல் இருந்தது.

முஷரஃப்புக்கும் இது தெரியும். அவர் முழு விருப்பத்துடன் ஆப்கன் யுத்தத்தில் அமெரிக்கச் சார்பு நிலை எடுக்கவில்லை. அது காலத்தின் கட்டாயமாகத் திணிக்கப்பட்டிருந்தது. பாகிஸ்தானில் வண்டி வண்டியாகத் தீவிரவாத இயக்கங்களை வளர்த்துவிட்டுவிட்டு, அதே இயக்கங்களுக்கு எதிரான யுத்தத்தில் பங்கு கொள்வது குறித்த அபத்த முரண் அவருக்குப் புரிந்தே இருந்தது. ஆனால், அந்தச் சமயத்தில் பாகிஸ்தானியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதைக் காட்டிலும் அமெரிக்காவின் கோபத்துக்கு இலக்காகிவிடாதிருக்க வேண்டும் என்கிற ஜாக்கிரதை உணர்வுதான், அவருக்கு மேலோங்கியிருந்தது.

எனவே, தனது அதிகாரிகளுடன் மிக மும்முரமாக விவாதித்தார். மூன்று சாத்தியங்கள் அவர்களுக்குத் தோன்றின. லஷ்கரைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக பாகிஸ்தானும் அறிவிக்கலாம். சில லஷ்கர் முகாம்களில் ரெய்டு நடத்தலாம். ஆப்கனில் அமெரிக்கா நடத்தும் தீவிரவாதிகள் வேட்டையை பாகிஸ்தான் தன் சொந்த ஊரிலேயே செய்யலாம்.

குறிப்பிட்ட எந்த ஓர் இயக்கத்தையும் முழுக்க அழிக்காமல் அனைத்துத் தரப்பிலும் சில உயிர்களை எடுத்து, சில ஆத்மாக்களைத் தாற்காலிகமாகச் சிறையில் தள்ளி வைக்கலாம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்காவது இயக்கங்கள் எந்தவிதமான கெட்ட காரியங்களிலும் ஈடுபடவேண்டாம் என்று தனிச்சுற்று வேண்டுகோள் அறிக்கை அனுப்பலாம். இதனை ஐ.எஸ்.ஐ.யே செய்து முடித்துவிட முடியும்.

ஏகமனதாக ஏற்கப்பட்ட இந்த மூன்று அம்சத் தீர்மானத்தின் முதல் கட்டமாக, டிசம்பர் 30-ம் தேதி லஷ்கரின் ராணுவத் தலைமை அதிகாரியான ஹஃபீஸ் முஹம்மது சயீதை இஸ்லாமாபாத்தில் வைத்துக் கைது செய்தார்கள். தேச விரோதப் பேச்சுகள், மக்களை உசுப்பேற்றிவிடும் காரியங்கள் என்று அந்தக் கைதுக்கான காரணங்கள் சொல்லப்பட்டன.

இங்கே கவனிக்கவேண்டும். எது தேச விரோதப் பேச்சு? ஹஃபீஸ் சத்தியமாக பாகிஸ்தான் முர்தாபாத் என்று பேசவில்லை; கோஷமிடவில்லை. காஷ்மீருக்காக யுத்தம் தொடரும் என்று எப்போதும்போலத்தான் பேசினார்.

ஆனாலும் கைது செய்யப்பட்டார் என்றால், என்ன காரணம் இருக்கமுடியும்? முஷரஃப் மறைமுகமாக உணர்த்த விரும்பியது என்ன? யாருக்கும் புரியவில்லை அல்லது அரைகுறையாகப் புரிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தீவிரவாத இயக்கங்களை ஒடுக்கிவைப்பது ஒன்றுதான் தன் பதவிக்குப் பாதுகாப்பு என்பது முஷரஃப்புக்கு மிகத் தெளிவாகப் புரிந்துவிட்டது.

அதனால்தான் இந்தக் கைது என்று தேசம் முழுதும் பேசினார்கள். இது அவரது இமேஜை மேலும் குறைத்தது. ஆனால், அது குறித்தெல்லாம் உட்கார்ந்து கன்னத்தில் கைவைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்க அவகாசம் கிடையாது. அதிரடியாக பாகிஸ்தான் முழுதும் பல்வேறு தீவிரவாத இயக்க முகாம்களின் மீது ரெய்டு நடத்த ஆரம்பித்தார்கள். தினசரி பத்துப் பேரையாவது கைது செய்து போட்டோ எடுத்து 'இவர்கள் தீவிரவாதிகள்; நாங்கள் பிடித்துவிட்டோம்' என்று பேப்பர்களின் முதல் பக்கத்தில் போட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்ப சூழல் குறித்து பர்வேஸ் முஷரஃப் தன்னுடைய வாழ்க்கை வரலாறான "In the Line of Fire" மிகச் சாமர்த்தியமாக, அதிபுத்திசாலித்தனத்துடன் விவரித்திருக்கிறார். கடந்த

வருடம் எழுதப்பட்ட நூல்களிலேயே மிகுந்த சாமர்த்திய உணர்வுடன் எழுதப்பட்ட புத்தகம் என்று 'லைன் ஆஃப் ஃபயர்' நூலைச் சொல்லலாம். முஷரஃப் எத்தனை பெரிய கெட்டிக்காரர் என்று படித்தால் புரியும். காலம் காலமாக தீவிரவாத இயக்கங்களால் பாகிஸ்தான் பட்டுவரும் கஷ்டங்கள் என்று அவர் இடும் பட்டியல் யாருக்கும் வியப்பு ஏற்படுத்தும். ஓரிடத்தில், 'அமெரிக்காவுக்கு அல் காயிதா செய்த கொடுமையைவிட எங்களுக்கு உள்ளூர் தீவிரவாத இயக்கங்கள் செய்த பாதிப்புகள் மிக அதிகம்' என்று சொல்கிறார். தன்னைக் கொல்வதற்கு இரண்டு முறை முயற்சி செய்து தோற்ற தீவிரவாதிகள் குறித்து எழுதும்போது, இறையருளால் மட்டுமே தப்பித்ததாகக் குறிப்பிடுகிறார்.

மீண்டும் கவனிக்கவேண்டும். பாகிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடுதான். ஆனால், முஷரஃப் தன்னையொரு மதவாதியாக ஒருபோதும் வெளிப்படுத்திக் கொண்டதில்லை. அதுநாள் வரை ஒருபோதும் தனக்கு இறைநம்பிக்கை இருப்பதாகவும் காட்டிக்கொண்டதில்லை. ஓர் அறிவுஜீவியாக, கட்டுப்பாடுள்ள ராணுவ அதிகாரியாக மட்டுமே வெளிப்படுத்தி வந்திருக்கிறார். ஆனால், சடாரென்று இறையருள் அது இது என்று அவர் அடித்த ஸ்டண்ட் பாகிஸ்தான் மக்களைச் சற்றே குழப்பியது. என்னதான் அவரது வாழ்க்கை வரலாறு பாகிஸ்தானில் ஒரு ஃபெய்லியர் புத்தகமாகிவிட்டது என்றபோதும், சர்வதேச அளவில் முஷரஃபின் மீது விழுந்த முழு மோச இமேஜை, அந்நூல் ஓரளவு குறைத்தது என்பதை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்.

தான் ஆட்சிக்கு வந்த முதல் நாளிலிருந்தே பயங்கரவாதத்துக்கும் பயங்கர வாதிகளுக்கும் எதிராக என்னென்ன செய்திருக்கிறேன், என்ன செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்று பக்கம் பக்கமாக வாக்குமூலம் அளித்திருக்கிறார் முஷரஃப். அதெல்லாம் அமெரிக்காவின் திருப்திக்காக. பாகிஸ்தானியர்களின் திருப்திக்கு?

காஷ்மீர் தீவிரவாதிகளை அவர் எல்லா இடங்களிலும் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என்று மட்டுமே குறிப்பிடுகிறார். அந்த வகையில் லஷ்கரின் தலைவரை முஷரஃப் அரசு கைது செய்தது என்பது ஒரு சுதந்திரப் போராட்ட வீரரைக் கைது செய்ததற்குச் சமமாகாதோ? அதனால்தான் பாகிஸ்தானியர்கள் அவரது புத்தகத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட்டார்கள்.